# அகம் புறம்

அகமறி யாதார் புறமறி யாரே -ஐந்திறம்

உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் என்பவர்க்
குள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் எம்மிறை
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பவர்க்
குள்ளத்தும் இல்லை புறத்தில்லை தானே -திருமந்திரம்
புறத்துளா காசம் புவனம் உலகம்
அகத்துளா காசமெம் மாதி யறிவு
சிவத்துளா காசஞ் செழுஞ்சுடர்ச் சோதி
சகத்துளா காசத்தின் தானஞ் சமாதியே -திருமந்திரம்

அகத்தினும் புறத்தினு மமர்ந்தருட் ஜோதி -திருஅருட்பா

மேற்க்கண்ட பாடல் வரிகளின் மூலம் ஆகாசம் ஓர் இன்றியமையாத பொருள் என்பதும் அது அகத்திலும் புறத்திலும் உள்ளது என்பதும் தெளிவாகிறது. அகம் புறம் என்ற சொல்லுக்கு ஓர் ஆழமான பொருளை நாம் அறிவதில்லை ஆனால் தமிழ் நூல்களும், சித்தர்களும் இச்சொல்லுக்கு ஆழமான பொருளை கூறினர் என்பது உண்மை. சிற்பக்கலைக்கு இலக்கணம் வகுத்து கொடுத்த சங்ககால சிற்பச்சித்தன் மாமுனி மயன் ஒரு சிற்பியாக மனிதர் தம் உள்ளத்தில் (அகத்தில்) ஏற்படும் உணர்வானது புறத்தில் எவ்விதம் வடிவம் பெறுகிறது என்பதை தன் படைப்பான ஐந்திற நூலில் கூறுவதை திருமந்திரம், திருவாசகம், திருஅருட்பா, உபநிஷதங்கள் முதலிய நூல்களின் துணை கொண்டு ஆய்வதே இக்கட்டுறையின் நோக்கம்.

---

விண்ணை முதற் பூதமாகவும் சிருஷ்டிகளுக்கெல்லாம் ஆதாரமான இடமென்றும் தமிழ் நூல்கள் கூறுகின்றது. அது மட்டுமின்றி இந்த வெளியை "ஒளிவெளி" என்றும் "வெளிஒளி" என்றும் கூறுகின்றது. அதாவது “ஒளிமயமான விண்” என்பது பொருள்.

தானே வெளியென எங்கும் நிறைந்தவள்
தானே பரம வெளியது வானவள்
தானே சகலமு மாக்கி அழித்தவள்
தானே யனைத்துள அண்ட சகலமே -திருமந்திரம்

"அண்டமூலமாய் பிண்ட மூலமாய் கொண்டிலங்கு வெளி ஒளியென”
என்று - மய னும்

“விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்”
என்று - திருவாசகமும்

"விண்ணினுள் விண்ணாய் விண்ணடு விண்ணாய்
அண்ணி நிறைந்த அருட்பெரும்ஜோதி"
என்று திருவருட்பாவும் பேசுவதைக் காண்க.

மேலும் நமக்கு வெளியில் இருக்கும் ஆகாசத்தைப் போல நமது உடலுக்குள்ளும் ஓர் **ஆகாசம்** இருக்கிறது என்கிறது ஐந்திறம். இதனைச் **சிற்றவை** என அழைக்கின்றது. ஐந்திற கூற்றின்படி சிருஷ்டி நிகழும் இடம் பரவெளியாகிய பேராகாசம் மற்றும் நமது உள்ளத்தில் உள்ள சிற்றாகாசம் (சிற்றவை) ஆகிய இரு இடங்களும் தான். இதனை **அகச் சிற்றம்பலம்** என்றும் **புறச்சிற்றம்பலம்** என்றும் கூறலாம்.

நாம் காணும் இவ்வுலகமும் ஏன் மனிதனும் கூட ஆகாசத்திலிருந்து தோன்றியவர்கள் என்றே உபநிஷதங்கள் கூறுகின்றன.

தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மன ஆகாச: ஸ்ம்பூத:
ஆகாசாத்வாயு: வாயோறக்னி: அக்னேராப:
அத்ப்ய: ப்ருதிவீப்ரிதிவ்யா ஓஷதய:
ஓஷதீப்போன்னம் அன்னாத்புருஷ:

(தைத்திரீயோபநிஷதம் 2-1)

இவ்விதம் ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து நீரும், நீரிலிருந்து புவியும் தோன்றியதாக தைத்திரீயோபநிஷதம் கூறுகின்றது.

விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்

என திருவாசகமும் விண்ணை முதற் பூதமாக கூறுவதை காணலாம். இவ்வாறு விண்ணிலிருந்து மண் தோன்றியது என்றால் வெறும் வெளியாக இருக்கின்ற இந்த விண்ணில் என்ன இருக்கிறது என்ற கேள்விக்கு ஐந்திறம் இந்த விண்ணில் ஒளி அணுக்கள் உள்ளது என்று கூறுகிறது. இதனை விண்கரு என்றும், அக்கரு ஒளியாலான கரு என்றும், ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கும் கரு என்றும் கூறுகிறது. அவ்வாறு கண்டு கொண்ட ஒளிக் கருக்குள் கருவுக்கும் கருவாய் மற்றொரு ஒளி இருப்பதாக கூறுகின்றது. இத்தகைய ஒளியை "**ஒளியை ஒளிரும் ஒளி**" என்றும், "**ஒளியினை உமிழும் ஒளி**" என்றும் கூறுகிறது.

ஒளிபரம் பொருளே யாகி ஒளிமுதற் பொருளே யாகி
ஒளிக்கலைப் பொருளே யாகி ஒளிநிலைப் பொருளே யாகி
ஒளியெழில் ஆற்ற லாலே ஒளிஒளி நிலையினாலே
ஒளிஒளி யாய்வி ளங்கும், ஒளியொளிர் ஒளியே போற்றி.

- மயன் உரைப்பாடல்

ஒளியாகி உள் ஒளியாய் உள் ஒளிக்குள் ஒளியாய்
ஒளி ஒளியின் ஒளியாய் அவ் ஒளிக்குளும் ஓர் ஒளியாய்
வெளியாகி வெளி வெளியாய் வெளியிடைமேல் வெளியாய்
மேல்வெளிமேல் பெருவெளியாய்ப் பெருவெளிக் கோர் வெளியாய்

- திருவருட்பா

ஆகையால் இந்த விண்ணில் இருப்பது ஒளிக்கருவே என்று கூறுகின்றது. மேலும் இதனை ஒளி அணு (light) என்றும் ஒலி அணு (Sound) என்றும் கூறுகின்றது. அதாவது ஒளியில் இருந்து ஒலி தோன்றுகிறது என்பதாகும். ஐந்திறக் கூற்றின் படி இந்த ஒளி, ஒலி அணுக்களே இப்பிரபஞ்ச உற்பத்திக்குக் காரணம். மேலும் ஆகாஸத்திலிருந்து பூமியானது தோன்றுகிறது என்று கூறும்போது இக்கருத்தை,

"வானிடைக் காற்றும் காற்றிடை நெருப்பும்
ஆனறவகுத்த வருட்பெருஞ்ஜோதி
நெருப்பிடை நீரும் நீரிடைப் புவியும்
அருப்பிட வகுத்த வருட்பெருஞ்ஜோதி"

என வள்ளலார் பெருமகனாரும்

"பாரிடை யைந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மிகழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விறைந்தாய் போற்றி
யளி பவருள்ளத் தமுதே போற்றி"

எனத் திருவாசகமும் இக்கூற்றை உறுதி செய்கின்றது.

அது மட்டுமின்றி இந்த மூல ஒளி அணுக்கள் பேருள்ளமாகின்ற பேராகாசத்தில் மட்டுமின்றி நமது உள்ளமென்ற சிற்றாகாசத்திலும் இருப்பதாக ஐந்திறம் கூறுகின்றது. இவ்வொளியணுக்கள் எப்போதும் துடிப்புடனே இருப்பதாகவும் கூறுகின்றது. இந்த துடிப்பைத்தான் "காலம்" என்ற பெயரில் ஐந்திறம் குறிப்பிடுகிறது. ஆகையால், நமது உள்ளமாகின்ற சிற்றாகாசத்தில் உள்ள இந்த அணுக்களின் துடிப்பே இயல், இசை, நடம், கட்டிடம், சிற்பம் முதலிய ஐங்கலைகளாக வெளிப்படுகின்றன. இதையே ஐந்தியல் என்று ஐந்திறம்

கூறுகின்றது. இந்த ஐந்தியல் எவ்விதம் ஐந்து கலைகள் தோன்றக் காரணமாகின்றது என்று பிறகு குறிப்பிடுவோம்.

இந்த அணுக்களைப் பற்றி குறிப்பிடும் போது இந்த அணுக்களின் வடிவத்தை கனசதுர வடிவமுள்ளதாக ஐந்திறம் கூறுகின்றது. ஐந்திற நூலில் இச்சதுர வடிவத்தை நாற்புறத்தியல் என்று சங்கத்தமிழ் சொல்லாகக் குறிப்பிடுவதை காண முடிகின்றது. இதிலிருந்து ஒரு நுட்பத்தை நன்கு அறியலாம். அதாவது அருவ நிலையில் ஒளியாக தீயாக உள்ள அந்த மூலப் பொருள் அரு உருவ நிலையில் கனசதுர வடிவமாக மாறி விடுகிறது. அதாவது அருவப் பொருள் பெற்ற ஒரு கரு வடிவம் தான் இந்த கனசதுரம் வடிவம். இன்னும் சொல்லப் போனால் இந்த கரு உடலாகும், அதன் உள்ளிருக்கும் ஒளி உயிராகும். பிறகு உருவ நிலயில் இவ்வுலகில் நாம் காணும் எல்லா பொருளாகவும் மாறுகிறது. இக்கருத்தை உற்று நோக்குகையில் இந்த மூலப் பொருளானது தீ அல்லது வெப்பம் எனப் பொருள் படுகிறது. இதனை மூலக்கனல் என்றும், மூலச்சூடு என்றும், பிரணவச்சூடு என்றும் ஐந்திறம் கூறுகின்றது. ஆகையால் கடவுள் அருவ நிலையில் சூடாக இருக்கிறான் என்பதே ஆகும். இதனையே வள்ளலார் ஒளிவளர் உயிரே; உயிர் வளர் ஒளியே; ஒளியுயிர் வளர் தரும் உணர்வே எனக் குறிப்பிடுகிறார்.

**அது மட்டுமின்றி அருவ நிலையில் ஒளியாக உள்ள கடவுள் அரு உருவநிலையில் கனசதுர வடிவம் பெற்று உருவ நிலையில் இவ்வுலகில் காணும் எல்லா பொருள்களிலும் உறைந்து கிடக்கின்றான் என்பதே ஆகும்.** எனவே கடவுள் தன்னை தானே உருமாற்றிக் கொள்கின்றான் என்ற விஞ்ஞான நுட்பம் நன்கு தெரிகிறது. இதனை தெளிவுப்படுத்தும் வகையில் வாஸ்து நூலாகிய அகஸ்திய சகளாதிகாரம் – "சகள, நிஷ்கள, மிஸ்ர நிலையிலுள்ள பரமேஸ்வரரின் வடிவ இலக்கணங்களைக் கூறுகின்றேன்" எனத் தொடங்குகிறது.

உருவமும், அருவமும், உபயமும் ஆகிய அருள்நிலை தெரிந்த அருட்பெருஞ்ஜோதி என வள்ளலார் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. ஆகையால் **கடவுளின் மூல வடிவம் சதுரமே**. இக்கருத்தை முதலில் கூறிய விஞ்ஞான நூல் ஐந்திறம் என்றால் அது மிகையாகாது. எனவே மூலமாக இருக்கின்ற கடவுள் சதுரமாகையில், அதிலிருந்து வெளிப்படும் எல்லா பொருளும் கனசதுர வடிவமுடையதே. கடவுளின் மூல வடிவம் சதுரம் என்று வல்லலாரும் பேசுவதைக் காண்க.

சதுரப்பேரருள் தனிப்பெரும் தலைவனென்று
எதிரற்று ஓங்கிய என்னுடையத் தந்தையே

- திருவருட்பா 1151 கூறுவதைக் காணலாம்.

இவ்வாறு அருவுருவநிலையில் கனசதுர வடிவமான உடலுக்குள்ளே உடலற்று நூல் வடிவில் நடுக்கமுற்று நடம் புரிவதே சத்தியமான ஒளி பொருள். இப்பொருளுக்கு ஐந்திறம் சூட்டிய பெயரே ஆடவல்லான் என்ற நடராஜனின் உருவமாகும். இந்த நூல் வடிவினதான அப்பொருள் ஒரு லயத்தில் இயக்கம் கொள்வதை உற்றறிந்து இந்த இயக்கத் தன்மையை குறிப்பிடுகிறது. இதைத்தான் ஐந்தொழில் என்றும் பஞ்ச கிருத்தியம் என்றும் சொல்லப்படுவதாயிற்று. இந்த ஐந்தொழிலானது நமது சிற்றாகாசத்திலும் (சிற்றவை) பேருள்ளத்திலும் (பேரவை) ஆகாசம் நடப்பதாகச் சொல்கிறது. இவ்வாறு அருவுருவநிலையில் கனசதுர வடிவினதாக அப்பொருள் நுண்ணிய நிலையில் இருக்கிறது என்றும், அதற்கு வாஸ்து மரபு சூட்டிய பெயர் "**பரமாணு**" என்பதாகும்.

இவ்விதம் அருவுருவநிலையில் கனசதுர வடிவமாக உள்ள இந்த அணுக்கள் நமது சிற்றாகாசத்திலும், பேராகாசத்திலும் உறக்க நிலையில் இருக்கின்றது. நமது உள்ளத்தில் எழும் உணர்வே இவ்வணுக்களை இயங்கிடச் செய்கிறது. இயக்கம் கொண்ட அணுவே வேறு பல அணுக்களோடு ஒருவகையான கணக்கில் சேர்ந்து தெரிபொருளாக மாறுகிறது.

நமது உள்ளமெனும் சிற்றாகாசத்தில் இந்த மூல வடிவம் எவ்விதம் தோன்றுகின்றது என்பதை மரீசி சம்ஹிதை என்ற வைஷ்ணவ ஆகமம் -

**பிராணாயாமம் செய்யும் போது இதய வெளி எனும் தாமரையானது விரிகின்றது என்றும் அந்த நேரத்தில் தோன்றும் வைஸ்வாணர அக்னியின் உச்சியில்**

**பொன்னிறமானதும், சதுர வடிவினதான ஒரு பிந்து தோன்றுகிறது என்பதாக நமது உள்ளத்திலும் நிகழும் இந்த நிகழ்ச்சியைக், கூறுகிறது.**

இந்த நிகழ்வை சற்று உற்றுநோக்குகையில் அருவுருவநிலையில் உள்ள ஆகாஸ ஆன்மா தன் உணர்வால் தன் சூட்டில் தானே சின்னப்பட்டு கருவாக மாறுகின்றது அந்த கரு வடிவமே பொன்னிறமான சதுரம்.

இந்நிகழ்வை ஐந்திற நூல் -

"விரிந்து விளங்கும் விண்ணிலைச் சிற்றவை
புரிந்து நோக்கின் எண்ணிலைச் சிற்றவை
உணர்வினாய்ந்து ஒளியாற் கண்டே
உணர்கலைச் செழுந்தமிழ் சிற்பமெண் கலையே" - ஐந்திறம் 658

என்பதாகக் கூறுகின்றது. அதாவது அருவநிலையிலுள்ள ஆகாஸ ஆன்மா தன் உணர்வால், ஒளியால் தானே கருவாக மாறுகின்றது என்றும் அக்கரு 64 சதுர ஒளி அணுக்களால் ஆனது என்றும் கூறுகின்றது

"உள்ளூறும் உணர்வே உறுகலை உணர்வால்
தெள்ளூறும் நிலைகலைச் சிற்றவை நோக்கி
அறுபான் நான்கியல் அமைவுறக் கண்டே
உறுநிலை நாற்புறத் தியலைத் தியல் நெறி
கணக்கியல் மாநெறி கலைநெறித் தேர் நிலை
பிணக்கறும் தூநெறி பெருநெறி தேர்ந்தே
பெருவளியியலும் கரு வெளி திறனும்
உருவெளி ஆக்கம் ஒளிநிலை தேர்ந்தே" - ஐந்திறம் 856

என்று நமது உள்ளமெனும் சிற்றவையின் அமைப்பினையும் செயல்பாடுகளையும் கூறுகின்றது. இந்த சிற்றாகாசத்தை (சிற்றவை) பற்றி உபநிஷதங்கள் என்ன சொல்கின்றது என்று பார்க்கும் போது தைத்திரீய உபநிஷதம்.

ஸய ஏஷோந்தர்ஹ்ருதய ஆகாச:
தஸ்மின்னயம் புருஷோமனோமய:
அம்ருதோஹிரண்மய: 6:1

அதாவது இதயத்தின் உள்ளே வெளி ஒன்று உள்ளது. அதில் ஆன்மா விளங்குகின்றது. அது உணர்வு மயமானது, அழிவற்றது, பொன்னொளி வீசுவது என்பதாகக் குறிப்பிடுகின்றது. அது மட்டுமின்றி நாராயண ஸூக்தம் இதய வெளியைப் பற்றிக் குறிப்பிடுகையில் இதற்கு 3 அடையாளங்களை குறிப்பிடுகின்றது. ஒன்று தொப்புளுக்கு மேலே ஒரு சாண் தூரத்தில் உள்ளது என்றும், பௌதீக இதயமும் அதே தூரத்தில் தான் உள்ளது. ஆனால் அது சற்று இடது புறம் உள்ளது என்றும், ஆனால் இந்த வெளியானது நடுவில் உள்ளது. இரண்டாவது, இது சுடர் வரிசையில் சூழப்பட்டுள்ளது. மூன்றாவது அந்த இதயமும் பிரகாசிக்கிறது என்பதாக 3 அடையாளங்களைக் குறிப்பிடுகின்றது. இது பௌதீக இதயத்துக்குப் பொருந்தாது.

மேலும் நாராயண ஸூக்தம் 4.10.13-ல் இந்த இதயத்தின் உள்ளே உள்ளது ஒரு வெளி என்றும், தாமரை மொட்டுப் போன்ற இதயம் நாற்புறங்களிலும் நாடிகளால் சூழப்பட்டுத் தொங்குகிறது. அதன் உள்ளே நுண்ணிய ஆகாஸம் உள்ளது. அனைத்தும் அதில் நிலை பெறுகின்றன என்றும் கூறுகின்றது.

சாந்தோக்ய உபநிஷதம் 8.11.3 -ல் இந்த உடம்பினுள் தாமரை போன்ற சிறு மாளிகை உள்ளது அதனுள் அகவெளி உள்ளது. அதில் இருப்பதைத் தேட வேண்டும். புறத்தில் காணப்படுகின்ற வெளி எவ்வளவு பெரியதோ இதயத்தின் உள்ளே உள்ள வெளியும் அவ்வளவு பெரியது. வானுலகும், பூவுலகும், இதனுள் அடங்கும். அக்னி, வாயு, சந்திரன், சூரியன், மின்னல், நட்சத்திரங்கள் இன்னும் இந்த உலகில் என்னென்ன உண்டோ, என்னென்ன இல்லையோ அவையெல்லாம் இதனுள் உள்ளன என்பதாகக் கூறுகின்றது. மேற்கூறிய இக்கருத்துகளை உற்று நோக்கும் போது ஐந்திற நூல் நமது உள்ளமெனும் சிற்றாகாசத்தையும் (சிற்றவை) அதன்

இயல்புகளையும் சிற்றாகாசத்தில் உள்ள அணுக்கள் ஒன்று சேர்ந்து 64 சதுரங்களான ஒரு மண்டலமாக மாறுவதாகக் குறிப்பிடுகின்றது. இதற்கு உணர்ச்சியும், ஊக்கமும் இன்றியமையாததாகும்.

"எண்ணமும் உணர்வும் எழுதரும் ஆற்றலும்
திண்ணமும் நேர்மையும் சீர்மையும் உள்ளோர்
விள்ளும் இயலால் உண்மை உணர்வோர்" - ஐந்திறம் 31

"உறுதியும் உண்மையும் உழைப்பும் உணர்வும்
பெறுவதைக் கலைத்திறன் பெற்புற நல்குமே" - ஐந்திறம் 8

எனவே நமது உள்ளமாகிய இந்த சிற்றாகாஸம் ஒரு கணக்கியல் வடிவம் பெற்று, ஏன் ஒரு கணிப்பொறி போலச் செயல்படுகிறது என்றால் அது மிகையாகாது.

"ஊக்கமும் உணர்ச்சியும் ஒளிதரும் ஆக்கையும்
ஆக்கமும் அருளிய அருட்பெருஞ்ஜோதி" - திருவருட்பா 11

மேலும் உபநிஷதம் கூறும் கருத்தை உற்று நோக்கும் போது இதயத்தில் உள்ளே வெளி உள்ளது என்றும் அதில் பொன்மயமான ஆன்மா விளங்குகின்றது என்று தைத்திரீய உபநிஷதமும், சாந்தோக்ய உபநிஷதம் இந்த உடம்பினுள் தாமரை போன்ற சிறுமாளிகை உள்ளது. அதனுள் அகவெளி உள்ளது. அதில் இருப்பதைத் தேட வேண்டும் என்று குறிப்பிடுகின்றதே ஒழிய இந்த சிற்றவையின் வடிவம், கணக்கியல் நுட்பத்தை அறியவில்லை எனக் கூறலாம். ஆனால் இதயத்தில் ஒரு வெளி உள்ளது என்றும் அது மிக இன்றியமையாதது என்ற கருத்து உபநிஷதங்களில் உள்ளதை யாரும் மறுக்க முடியாது. இப்படி இருக்க இது போன்ற ஆய்வுகள் நடைபெற்றிருக்கின்றன என்றும் தெறிகின்றது. இதனை உற்று நோக்கும் போது ஐந்திறம் இந்த உபநிஷதங்களுக்கெல்லாம் மேலாக விளங்குகிறது என்பதை மறுக்க முடியாது.

இக்கருத்துக்களிலிருந்து நமது உள்ளமாகிய அகத்தில் நடக்கும் செயல்பாடுகளே பேருள்ளமாகிய புறத்திலும் நடைபெறுகின்றது. மேலும் நாம் நம் உள்ளத்தில் ஒன்றை உன்னி - உன்னிய அப்பொருளையோ அல்லது பொருளுக்கு நிகரான சொல்லையோ தோற்றுவிக்கிறோம். அவ்விதம் பேருள்ளமாகிய பேராகாசமும் தன் இயல்பிலே உள்ளூறும் தன்மையுடையதாயிருக்கிறது. அவ்வியல்பினாலேயே அதுவும் உன்னி -உன்னிய பொருளையும், பொருளுக்கு நிகரான சொல்லையும் வெளிப்படுகின்றது. இவ்விதம் இரு வெளிகளும் (அகவெளி, புறவெளி) ஒன்றை ஒன்று ஒத்த இயல்புடையதாகின்றது.

"உள்ளுவ உள்ளி உணர்வே ஓங்கி
கள்ளமில் உளத்தால் கருத்தே எண்ணி
சொல்லும் சொல்லே சொற்பொருளாகி
தொல்கலை நெறியாய் ஆய்வரல் நெறியே" - ஐந்திறம் 63

இன்னும் சொல்லப்போனால் உணர்வுற்ற ஒளியணு உணர்வுக்கொத்த பொருளை வெளிப்படுத்திடும் நோக்கில் தன்னைத்தானே முதலில் முடிக்கிக் கொண்டு விசையுடன் இடமிருந்து வலமாக சுழற்சி கொள்கிறது. இச்சுழற்சியினால் வளி தோன்றுகிறது. வளியும், வெளியும் சேர்ந்தசைத்து ஓம் ஒலி என்ற மூலவொலி பிறக்கிறது. இத்தகைய மூலவொலி நம் அகவிண்ணிலும், புறவிண்ணிலும் ஒரே இயல்பில் தோன்றுவதாகும். இது 'ஒ' என்ற முதல் ஒலி.

“ஓமெனும் ஓங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே” திருமந்திரம்

“ஒளியை யொளிசெய்து வோமென் றெழுப்பி
வளியை வளிசெய்து வாய்த்திட வாங்கி
வெளியை வெளிசெய்து மேலெழ வைத்துத்
தெளியத் தெளியுஞ் சிவபதந் தானே” திருமந்திரம்

இதன் பிறகு அவ்வணு மேலும் எழுச்சியும் சுழற்சியும் கொள்வதால் மூல ஒலிகளான அ,இ,உ,எ ஆகியவை தோன்றுகின்றன. இங்ஙனம் இம் மூலவொலிகள் விண்ணிலும் நம்மிலும் தோன்றுவது இயற்கையின் இயல்பு என ஐந்திறம் கூறுகின்றது. தமிழ் மூத்த மொழியாதலால் தமிழுக்கே இது முதலில் வாய்த்தது. எனவே இயல் மொழி என்று தமிழுக்குப் பெயராயிற்று. இயற்க்கை முதன் முதலில் பேசிய மொழி தமிழ் மொழி, அது மட்டுமல்ல இது விண் பேசிய மொழி. இன்னும் சொல்லப் போனால் இது ஒளி பேசிய முதல் மொழி.

"விண்ணொளித் தமிழாய் விளங்குறு முண்மை
எண்ணொளித் திறனுறும் எண் விளக்கும்மே" - ஐந்திறம் 463

மேலும் ஒளி முதன் முதலில் விண்ணில் இதனைத் தோற்றுவித்ததால் விண்ணொலி என்றும் ஓசை என்றும், அது வெளியில் படர்ந்ததால் அல்லது எதிரொலித்ததால் வெளிமொழி என்றும் அங்ஙனம் முதலில் ஒலித்தது "ஓம்" என்று ஐந்திறம் கூறுகின்றது.

“ஒளி முதற் கண்ட விண்ணொலி ஓசை
வெளிமொழி ஓமென விளம்பற் பாற்றே" - ஐந்திறம் 1

இது தான் ஐந்திற நூலின் முதல் சூத்திரமாகும். மேலும், இந்த ஓம் ஒலியானது ஆகாசத்தில் நிறைந்திருக்கும் ஒலியாகையில் நிறையொலி என்றும், சுருதி போல் ஒரே இயல்பில் ஒலிக்குமென்பதால் நேரொலி என்றும், வெளியில் முகிழ்ந்த ஒலியாகையால் அதாவது வெளியே ஒலியாக மாறுவதால் இது வெளியொலிஎன்றும், விண் பேசிய மொழியாதலால் விண்மொழி என்றும், உணர்த்தக் கூடிய பொருளைத் தன்னகத்தே மறைத்து அதனை ஒலி வடிவாய் உணர்த்துவதால் அதாவது ஒலியுணர்த்தும் பொருள் நம் கண்களுக்கு புலப்படாமல் மறைந்திருக்கிறது என்பது பொருள். ஆகையால் இது மறையொலி என்று பல பெயர்களால் ஐந்திறத்தில் அழைக்கப்படுகின்றது.

"நிறையொலி, நேரொலி, வெளியொலி, விண்மொழி
மறையொலி ஓமெ வகுத்தற் பாற்றே"

- எனக் கூறுகின்றது. இவ்விதம் "ஓம்" என்ற மூல ஒலிக்கே இயல்பில் ஐந்து பண்புகள் சொல்லப்படுவதைக் காண்க.

எனவே "ஓம் ஒலி" யானது மறை முதலாயிற்று மற்றும் மொழி முதலும் ஆயிற்று. தமிழுக்கு அடிப்படை ஒலி "ஓம்" என்பதை ஐந்திறம் வலியுறுத்துகிறது. இஃது அனைத்து உலக மொழிகளுக்கும் வாய்த்திட்ட இயற்கை நிலைதான். எனினும் தமிழ் மூத்த மொழியாகையால் இப்பெருமை அதற்கு முதலில் ஏற்பட்டு விட்டதென ஐந்திற பாக்களால் புலனாகின்றது. இவ்விதம் ஓம் ஒலியை மேலும் வலித்து அசைப்பதால் ஒலியணுக்கள் ஒன்று கூடி எழுத்தொலிகளை வெளியில் உமிழ்கிறதாம். ஆகையால் தான் ஐந்திறம் சூத்திரம் "அணுத்திறள் ஒளியே எழுத்தொலிச் சிறப்பாம்" என்று இந்த எழுத்தொலிகளை அதாவது அ,இ,உ,எ மற்றும் "ஓ" மையும் சேர்த்து ஐந்தொலிகளாகத் தோற்றம் கொள்கின்றது. இது தான் உயிரொலிகள் என்று உயிர்+ஒலிகள் இலக்கணத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதிலிருந்து தமிழுக்கு இயல்பாக வாய்த்திட்ட உயிரொலிகள், அடிப்படை ஒலிகள், ஐந்து என்று ஐந்திறம் கூறுகின்றது. இவ்விடத்தில் ஓர் முக்கிய செய்தியைக் குறிப்பிட வேண்டும்.

ஓர் அனுபவமானது நமது இதயக் குகைக்குள்ளே ஓர் அணு அளவினதான புள்ளியில் முதல் காட்சியாக மலர்ந்து அங்ஙனம் மலர்ந்த உளக் காட்சியானது ஐந்து படி நிலைகளை ஐந்து அலைகளை ஐந்து அடுக்கடுக்கான அலைகளைப் படியாகக் கொண்டு சுயமாகவே தோற்றுவித்துக் கொள்கிறது என்று சொல்லும் நிலையில் அந்த ஐந்து நிலைகள் முறையே அமிழ்தல், இமிழ்தல், குமிழ்தல், உமிழ்தல், இறுதியில் எல்லாம் சேர்ந்து தமிழ்ந்து தமிழாகும் என்பது ஐந்திற விஞ்ஞானம். இதனால் உணர்வின் இறுதி நிலை "தமிழ்" எனப் பெயராயிற்று. அதாவது உணர்வு மயமான எண்ண அலைகள் பிரமிடு போன்ற அமைப்பைத் தருகின்றன. இந்த உயிரணு முதலில் அந்தராகாசத்தில் சதுர அலைகளாகத் தோன்றி அடுக்கடுக்காக மேல் நோக்கி எழுச்சி பெற்று, அஃதொரு பிரமிடு காட்சியாக மாறுகின்றது. ஆகையால் இந்த பிரமிடை ஆன்மிக விஞ்ஞானம் வடிவம் என்று மேடைகளில் முழங்கியவர் டாக்டர்.வை.கண்பதி ஸ்தபதியார்.

நமது உள்ளத்தில் தோன்றிய உணர்வின் வடிவமே இந்த பிரமிடாகும். இன்னும் சொல்லப் போனால் இந்த உணர்வின் முதல் வடிவம் இஃது என்பதால் இது “**சிற்பம்**” எனப்படும். “சிற்பம்” என்ற சொல்லை "சித்பம்" என்று குறிப்பிட்டதொரு காலம் உண்டு எனவும், சிற்பம் என்ற சொல்லுக்கு மாற்றுச் சொல்லாக "சித்பம்" என்று தமிழ் அகராதியில் குறிப்பிடுவதையும் சுட்டிக் காட்டுகிறார் டாக்டர்.வை.கண்பதி ஸ்தபதியார் அவர்கள்.



தவளைமாநெறி



தவளமாடத் துச்சி

ஆகையால் நம் உள்ளத்தில் தோன்றிய அனுபவமே இந்த பிரமிடாகிய சிற்ப வடிவம். இதன் பொருட்டே தமிழையும் சிற்பம் என்ற சொல்லால் ஐந்திறம் அழைக்கின்றது.

"சிற்பச் செந்தமிழ் சிற்றவை எண் தமிழ்
பொற்புற் றாய்தல் பெருநெறி மரபே" - ஐந்திறம் 797

இன்னும் சொல்லப் போனால் உள்ளமாகிய சிற்றவை பெற்ற அனுபவமே ஐங்கலைகள் ஆவதால் இயல், இசை, நடம், சிற்பம்,கட்டிடம் ஆகிய இந்த ஐங்கலைகளையும் சிற்பம் என்றே ஐந்திறம் அழைக்கிறது.




இப்போது பாருங்கள் "ஜகத் சர்வம் சில்பமேவ பவதி" என்ற பாகவதத்தின் கூற்று நன்கு விளங்கும். அதாவது உலகில் உள்ள எல்லாம் சிற்பமாக இருக்கிறது என்கிறது பாகவதம். அப்படியானால் உலகில் உள்ளது எல்லாம் ஆடாமல் அசையாமல் சிலையாக இருக்கிறது என்று பொருளாகாது. மேற்க்கூறிய கூற்றை ஏற்றுக் கொண்டால் இந்த பாகவதத்தின் வரிகள் நன்கு புலப்படும்.

இவ்விடத்தில் மற்றுமொரு செய்தியைச் சொல்ல ஆசைப்படுகின்றேன். இந்த உள்ளமாகிய சிற்றவை என்ன செய்கின்றது, என்ன வடிவம் பெறுகின்றது என்று குறிப்பிட்டோம். இச்செய்திக்கு மேலும் வலு சேர்க்க ராமலிங்க அடிகளாரின் வரிகளை இங்கே குறிப்பிடுகிறேன்.

"அயனும் மாலும் தேடித் தேடி அலந்து போயி னார்
அந்தோ இவன் முன் செய்ததவம்யா தென்ப ராயினார்
மயனும் கருதமாட்டாத் தவள மாடத்துச்சியே" - திருவருட்பா 1818

அதாவது அயனும், மாலும் ஏன் இந்த உபநிடதங்கள் கூட தேட வேண்டும் என்று குறிப்பிட்ட அந்த மெய்ப்பொருள் ஐந்திறம் குறிப்பிட்ட "தவளை மாநெறி" அதாவது 8 X 8 =64 சதுரங்கள் கொண்ட மண்டலமாகிய தவள மாடத்து உச்சி தான் என்று அடிமுடி காண முடியாத அந்த பரம்பொருளின் வடிவத்தை அதாவது பிரமிடாகிய அந்த சிற்ப வடிவத்தை குறிப்பிட்டு பேசுகிறார் வள்ளலார் பெருமகனார். ஆனால் சிற்பிகளாகிய நாங்கள் இத்தோடு விட்டு விடவில்லை. அந்த பிரமிடு வடிவத்தை ஏன் இந்த சிற்ப வடிவத்தை நாம் காணும் ஆலய வடிவங்களில் அதாவது கருவறையாகிய அந்த வீட்டை சிற்றவையாகவும் அந்த சிற்றவையின் மேல் படிப்படியாக வளர்ந்து விளங்கிடும் உச்சியையே ஆலயத்தின் விமானமாகவும் படைத்துக் காட்டி அந்த ஆலயத்தை வணங்கிடும்படி செய்தவர்கள் சிற்பிகளே. திருமூலர் உள்ளம்

பெருங்கோயில் என்றும் இந்த உள்ளத்தில் தான் கடவுள் இருக்கிறார் என்றும் கூறுகிறார் எனினும் இந்த உள்ளமானது அக்கடவுளின் உருவத்தை அறிவதில்லை என்று கூறுவதை காண்க.

உள்ளத் தொருவனை உள்ளூறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே திருமந்திரம்

இதன் பொருட்டே

"ப்ராசாதம் புருஷம் மத்வா பூஜயேத் மந்த்ர வித்தம:"

என்று வாஸ்து நூல்கள் ஆலயம் மனித வடிவம், அதற்கு பூஜை செய்யுங்கள் என்று கூறுவதை உற்று நோக்குங்கள். இவ்விதம் அகத்தில் தோன்றிய உணர்வானது ஐந்துப் படிகளாக வெளிப்பட்டது. ஆகையால் உள்ளத்தில் தோன்றிய அடிப்படை ஒலிகளும் ஐந்தாகின்றது, இவ்வாறு அகத்தில் தோன்றிய உணர்வு கோட்டுருவாய் நிலை பெறுகின்றது. அதாவது கோட்டுருவாய் குறிக்கப்படுவதால் இது குறி எழுத்தாகும். இந்த குறியாக அல்லது கோடாக மாறியது எது என்றால் ஒலியே ஆகும். அந்த கோட்டில் ஒலி மறைந்துள்ளது. ஒலித்தால் தான் ஒளியாகும் இல்லாவிடில் அது வெறும் கோடாக அதாவது பொருளற்ற கோடாக இருக்கும். இதனால் தான் நமக்கு தெரியாத கோட்டு வடிவங்களை மற்ற மொழிகளை ஒலிக்க முடியாமல் போகின்றோம்.

அத்தகைய எழுத்துருக்களைத் தருவது "ஒளி" என்கிறது ஐந்திறம். ஒளிதான் ஒலிக்கும் முதல் என்கிறது ஐந்திறம். "ஒலி முதல் ஒளி" என்கிறது. அதனை

"ஒளி ஒலி வடிவாய் ஓங்கும் எழுத்தே"

"ஓம் ஒளி" என்றும் கூறுகின்றது. எனவே ஒளி தான் சொல்லுக்கு முதல் என்கிறது ஐந்திறம். பொருளுக்குத் தான் சொல்லே தவிர சொல்லுக்குப் பொருளில்லை. ஆகையால் நம் உள்ளமானது சொல்லைக் கொண்டு பொருளை உணர்கிறது. எனவே "ஓம்" என்பது ஒலி (sound) மட்டுமல்ல, ஓம் என்பது ஒளியுமாகும் (light) என்பதே ஐந்திற நூலின் மிக உயர்ந்த விஞ்ஞான நுட்பம்.

"ஒளி முதல் மொழியாய் ஒலி முதல் திறனாய்
உள்ளொளித் திறனுற உயிரொளி ஓங்கி
உள்ளிருந் தெழுதரும் உமிழ்தரும் ஒலியாய்
தெள்ளுறும் தமிழாய் திகழ் வொளி மொழியே" - ஐந்திறம் 104

ஆகையால் ஒளிதான் முதல் மொழி அதாவது மொழிக்கு ஆதியாக இருப்பது ஒளி. பிறகு நம் திறத்தினாலேயே அல்லது முயற்சியாலே அவ்வொளியானது ஒலியாகிறது. முதல் திறத்தினால் வெளிப்படுவது ஒலி. எனவே ஒலி முதல் திறனாகிறது.

இவ்விடத்தில் ஓர் செய்தியைக் குறிப்பிடல் இன்றிமையாததாம். நமது உள்ளமாகிய சிற்றவை 64 சதுர ஒளி அணுக்களால் ஆனது என ஐந்திறம் குறிப்பிடுகிறது. நம் திறனால் முயற்சியால் இவ்வொளி அணுக்கள் ஒலி வடிவினதான உயிரொலிகளை உமிழ்கின்றது என்று பார்த்தோம். ஐந்திறத்தில் ஒரு செய்யுள் இருக்கிறது. இதை காண்க

"உயிர்நிறை முயற்சி உள்வளித்திறனே
செயிரற எழும் அணுத்திளொலி ஆற்றல்
உரமும் கண்டமும் உச்சியும் மூக்கும்
வரவே இதழ் நாப் பல்வகைத் தொழிலாய்
வேருவே றெழுத்தொலி யாய்வரல் நெறியே" - ஐந்திறம் 62

மூச்சையிழுத்து விடுவது பிராணாயாயமம் எனப்படும். இங்கு இச்சொல் உயிர்நிறை முயற்சி உள்வளித்திறனே எனக் கூறப்படுகிறது. ஆகையால் சிற்றவையில் தோன்றிய சதுர வடிவினதான ஒளி அணுக்கள் ஒன்று சேர்ந்தே எழுத்தொலிகளை வெளிப்படுத்துகிறது என்பதே

இந்த ஐந்திற சூத்திரம் காட்டும் விஞ்ஞானமாகும். இதே போல் நன்னூல் செய்யுள் பேசுவதை காண்க.

"நிறை உயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
எழும் அணுத் திரள் உரம் கண்டம் உச்சி
மூக்கு உற்று இதழ்நாப் பல் அணத் தொழிலின்
வெவ்வேறு எழுத்து ஒலி யாய்வரல் பிறப்பே" - நன்னூல் 74

மேலும் ஓம் ஒலியானது அ,இ,உ,எ என்ற உயிரொலிகளாக வெளிப்பட்டது போல ஓம் எனும் ஒளியானது. வளி,தீ,நீர்,நிலம், ஆகிய மூலப் பொருளாக உயிரொளிகளாக வெளிப்படுகிறது. அத்துணையும் வெளியே செய்வதால் அல்லது வெளியே உருமாற்றம் கொள்வதால் வெளியையும் சேர்ந்து ஐம்பொருள்கள் என்றும் ஐம்பூதங்கள் என்றும் சொல்லுகிறோம். இவ்வெளி யெனப்படும் ஆகாசமே அவ்வொவ்வொன்றிலும் இறுக்கிறது. அதாவது ஆகாசம் தானே இந்த பஞ்ச பூதங்களாக மாறுகிறது. இது குறித்தே

"மண்ணினி லைம்பூ வகுத்ததி லைத்திறம்
அண்ணுற வமைத்த அருட் பெரும் ஜோதி" - திருவருட்பா 371

என வள்ளலார் குறிப்பிடுவதைக் காண்க. ஆகையால் தான் இந்த பேராகாசம் பெற்ற ஒளி பொருட்களை அல்லது ஐம்பூதங்களை இந்நூல் கூறுவதால் இது ஐந்திறம் என்று பெயர் பெற்றது. இந்நூல் ஐந்திரமா? அல்லது ஐந்திறமா? என்று எழுந்த அந்த கேள்விகளுக்கு பதில் தந்து ஐந்திறமே எனக் காட்டிவிட்டார் வள்ளலார் பெருமகனார்.

ஓம் ஒலியால் சொற்பொருள்களும், ஓம் ஒளியால் தெரிபொருள்களும் அவையிரண்டும் ஒரே பொருளை - ஒரே மூலப்பொருளை உணர்த்துகின்றன என கண்டோம். அவற்றை ஒலிப்பொருட்கள் என்றும், ஒளிப்பொருட்கள் என்றும் ஐந்திறம் குறிப்பிட்டுப் பேசுகின்றது.
சொற்பொருளோ அல்லது உருப்பொருளோ ஆக்கப்படுவதற்கு மூலப்பொருள் வேண்டுமல்லவா? அந்த மூலப் பொருள்கள் தான் ஒளியணுக்கள். இந்த ஒளியணுக்கள் தான் உள்ளத்தின் இயக்கத்தால் ஒலியணுக்களாகவும் மாறுகின்றன.

இந்த ஒளி அணுக்கள் ஒன்றோடொன்று அணுக்கமாவதால் உரு தோன்றுகின்றது. அப்படியானால், எத்தனை அணுக்கள் ஓர் உருவை தோற்றுவிப்பதற்குச் சேர்ந்திடல் வேண்டும் என்ற மற்றொரு வினாவும் உடன் எழுகிறதல்லவா? அவ்வணுக்கள் எட்டெட்டாகச் சேர்ந்து பிறகு எட்டின் மடங்காக விரிந்து செறிகிறது என்கிறது ஐந்திறம். இங்ஙனம் எட்டெட்டாக அணுக்கள் கூடுவது இயற்கையாகிய அவ்வணுக்களின் இயல்பு. மேலும், எட்டெட்டாக இந்த அணுக்கள் சேர்வதை வரிசை என்று சொல்லலாம். இந்த வரிசை என்பதற்கு "சீரியல்" என்ற ஓர் அழகான தமிழ்ச் சொல்லை ஐந்திறம் கூறுகின்றது. எனவே ஆக்கத்திற்கு அடிப்படையான கணக்கை எட்டியல் என்று குறிப்பிடுகிறது. இயக்கம் ஐந்தாகவும் அதன் ஆக்கம் எட்டாகவும் இயற்கையில் நிகழ்வதாக ஐந்திறம் கூறுகின்றது.

"எட்டே எட்டியல் எட்டெட் டியலே
எட்டின் நெறியே அளவை மாநெறி" - ஐந்திறம் 675

"எட்டணு தேர்த்துகள் நெறியென் றாகி
எட்டு தேர்த்துகள் இம்மி நிலையாய்
எட்டுறும் இம்மி எள்ளென் றாகி
எட்டெள் ளொருநெல் அளவை குறித்தே
எட்டுறும் நெல்கை விரலெனக் கண்டே
அளவை ஆக்கம் அறிதல் கலையாய்
உளவுறும் நுட்பம் உண்மை கண்டே
கண்டுறும் அளவை கருத்தி லிருந்தி
விண்டுறும் நெறிமுறை விளம்பற் பாற்றே" - ஐந்திறம் 676

இந்த ஒளி அணுக்களும் ஒலி அணுக்களும் சேர்ந்தே ஐங்கலைகளாகின்றன. (காண்க அட்டவணை) ஆகையால் தான் அணுத்திரள் ஒளியே எழுத்தொலி சிறப்பாம் என்று ஐந்திறம்

கூறுகின்றது. ஒளி, ஒலி அணுக்களே இந்த ஐங்கலைகளாகின்றன. இப்போது கீழ்க்கண்ட வரிகளை படியுங்கள்.

"அணுத்தருத் தன்மையிலையோன் காண்க" - திருவாசகம்

"அணோரணியான் மஹதோ மஹியான்"- கடோபநிஷதம்

இப்போது இந்த வரிகளின் அர்த்தம் நன்கு புரிந்திருக்கும். பரம் பொருள் எங்கும் உண்டு எதிலும் உண்டு என்பதும், 'ஓசை ஒளியெல்லாம் ஆனாய் நீ உலகிற்கு ஒருவனாய் நின்றாய் நீ,என ஏன் கூறுகிறோம் என இப்போது அறியலாம். அதாவது பரம்பொருள் தன்னை தானே அணுவடிவமாய் மாற்றிக் கொண்டு இக்கலைகளில் உறைந்து கிடக்கின்றான்.

இங்கு இது வரை நான் பேசிய ஐந்திற செய்திகளுக்கு உறுதுணையாக இருவர் கூறிய பாடல்களை குறிப்பிட்டேன். ஐந்திற நூல் பேசுவது போன்றே இருவரும் பேசுகிறார்கள். யார் இவர்கள் என்றால் மன்னுமாமலை மயேந்திரமதனில் சொன்ன ஆகமம் ஒன்று திருவாசகத்தில் குறிப்பிட்ட மாணிக்க வாசகர் மற்றவர் ஒளிவழிபாடு கண்ட ராமலிங்க அடிகளார் ஆகிய இருவரும் தான். ஏன் இருவரைப்பற்றி குறிப்பிடுகிறேன் என்றால் மாணிக்கவாசகர் குறிப்பிட்டது போல இந்த ஆகமம் மயேந்திர மலையில் சொல்லப்பட்டது. கடல்கோளில் அந்த ஆகமங்கள் கடலில் மூழ்கியது. மூழ்கிய அந்த ஓலைகளை மீன்கள் தன் வாயால் கல்வி மீனவர்கள் மூலமாக கிடைத்து விட்டது.

அதாவது கடல்கோளுக்கு முன் இருந்த தமிழர் தம் ஆகமங்கள் எல்லாம் பெறப்பட்டுவிட்டது. பெறப்பட்ட ஆகமங்கள் இருவருக்கும் கிடைத்திருக்கிறது. அவர்கள் இருவர் தான் மாணிக்கவாசகரும், வள்ளலாரும் ஆவர். அப்படி இருக்க இந்த மயேந்திர மலையில் இருந்தது யார்? இந்த ஆகமங்கள் யார் சொன்னது என்றால் அது தான் இதுவரை நான் ஐந்திறம் என்று பேசி வந்த நூலின் ஆசிரியர் மயன் என்ற குமரிக்கண்டம் பெற்றெடுத்த செல்வமாகும். இந்த ஐந்திற நூலும் கடல்கோளில் அழியாமல் நமக்கு கிடைத்திருக்கிறது. ஆகையால் ஒரு காலத்தில் வளர்ந்து உச்ச நிலை அடைந்திட்ட நாகரிகத்தின் பொக்கிஷப் பொருள் தான் இந்த ஐந்திறம் என்ற நூல்.

மேலும் இந்த ஆகாசமானது சப்தத்தை குணமாகக் கொண்டது என சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால் திருவாசகமும், திருவருட்பாவும் இது ஒளி நிறைந்த இடம் என்று கூறுகின்றன. கீழ்க்கண்ட மய சூத்திரமும், திருவருட்பா திருவாசகமும் ஒரே கருத்தைக் கூறுவதைக் காண்க.

"அண்டமூலமாய் பிண்ட மூலமாய் கொண்டிலங்கு வெளி ஒளியென”

-என்று மய சூத்திரமும்

“விண் நிறைந்து, மண் நிறைந்து, மிக்காய், விளங்கு ஒளியாய்!”

- என்று திருவாசகமும்

"விண்ணினுள் விண்ணாய் விண்ணடு விண்ணாய்
அண்ணி நிறைந்த அருட்பெரும்ஜோதி” - என்று திருவருட்பாவும் பேசுகின்றது.

வெளியை அறிந்து வெளியி னடுவே
ஒளியை அறிய னுளிமுறியாமே
தெளிவை அறிந்து செழுநந்தி யாலே
வெளியை அறிந்தனன் மேலறி யேனே

என்ற திருமூலர் வாக்கின்படி நமக்கு உள்ளும், புறமும் ஆகாசமாய், உள்ளமாய், உயிராய், உணர்வாய் வீற்றிருந்து நம்மை இயக்கும் பரம்பொருள் ஐங் கலைகளாய் (இயல், இசை, நடம், கட்டிடம், சிற்பம்) தன்னை உரு மாற்றிக் கொள்கிறான் என்பதை மயன் என்ற சிற்பி தன்னுடைய ஐந்திற நூலில் கூறியதை ஆய்வு செய்தோம். மயன் 64 நூல்களையும் 12 செந்நூல்களையும் எழுதியதாக ஐந்திற நூல் கூறுகின்றது. தமிழ் மொழியிலுள்ள இந்நூல்களை பிற நூல்களின் துணை கொண்டு ஆய்வு செய்தால் தமிழர் தம் அறிவியல் நுட்பங்களை மற்றும் அறிய செய்திகளையும் அறியலாம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

வாழ்க தமிழ், வளர்க தமிழர் கட்டிடக்கலை, ஓங்குக மயன் புகழ்!

நன்றி

**ஸ்தபதிதாசன் ச. சந்தான கிருஷ்ணன்.**

அட்டவணை

# சிற்றாகாசம்/ பேராகாசம்

(அகம்) (புறம்)

**"அகமும் புறமும் ஒன்றே" - ஐந்திறம்**

உடம்பினுள் தாமரை போன்ற சிறுமாளிகை உள்ளது. அதனுள் அகவெளி உள்ளது. புறவெளி எவ்வளவு பெரியதோ இதயத்தின் உள்ளே உள்ள வெளியும் அவ்வளவு பெரியது. வானுலகும், பூவுலகும் இதனுள் அடங்கும். அக்னி, வாயு, சந்திரன், சூரியன், மின்னல், நட்சத்திரங்கள் இன்னும் இந்த உலகிக் என்னென்ன உண்டோ, என்னென்ன இல்லையோ, அவையெல்லாம் இதனுள் உள்ளன. -

சாந்தோக்கிய உபநிஷதம் 8.1.1,3

"உள்ளும் புறமும் ஒருவழி நின்றே
தெள்ளும் உணர்வால் செம்மொழிச் செவ்வியல்
ஒளி முதற்கண்ட ஆய்வுணர் வோங்கி
தெளிகலை செப்பல் ஐந்திய லாகி
ஐந்திறத் துண்மை செஞ்சொல் செந்தமிழ்
தந்திறம் விளக்கும் ஐந்திற நூலே" - ஐந்திறம் 207

**ஒளியணு** **ஒலியணு**

"ஒளியணுத் திரளும் ஒலியணுத் திரளும்
ஒளிருற நோக்கி ஒளிநிலை யுணர்ந்தே
ஒளியே மூலம் ஒளிக்கலை யாய்ந்தே
வெளியுறும் நிலைதெரி ஒலியணு வாய்ந்தே
ஒளிஒலி நுட்பம் மெய்ப்பொரு ளுணர்ந்தே
தெளிவுறக் காண்டல் ஒலிநிலை யோர்தல்
ஒலிப்பொருள் மூலத் தெரிநிலை யாய்தல்
ஒலிஒளித் திறனா யோங்குறும் நிலையால்
உணர்ந்துறு மாற்றல் உணர்த்துறும் நிலைக்கலை
உணர்வுற வோங்கிச் செய்முறை யாய்ந்தே
நோக்குறும் நோக்கும் இயற்றுந் திறனும்
ஆக்குறும் ஆற்றல் மெய்க்கலைத் திறனே"

## 1.இயல்

"அணுத்திரள் ஒலியே எழுத்தொலிச் சிறப்பாம்"
"அணுத்திரள் ளொலித்திறன் மெய்ந்நிலை யறிந்தே"
"அணுவணுக் கூற்றினாய்நிலை தேர்ந்தே"
"எழுத்தொலி நெறிமுறை இயல்பினுணர்ந்து"
"வழுத்து மோசை மாத்திரை யுணர்ந்தே"
நெறிபடக் கிளந்து குறிநிலை குறித்து"
"அறிநிலை எழுதலின் எழுத்துரு வோங்கி"
"அணுத்திர ளாக்கம் மெய்ம்மைப் பொருள்நிலை"
நுணுக்குற நோக்கி மெய்ம்மைப் பொருள்நிலை"
"நுணுக்குற நோக்கி நுவலுறும் நுட்பம்"
"எழுத்துறு மாக்கம் இயல்நிலை யறிந்தே"
"எழுமணுத் திரளொலி நுட்பந் தெரிந்தே"
"எழுத்தியல் நெறியே இயம்புதல் மரபே"
"வானியல் ஒலியே ஓசை மொழியாய்த்"
தானியல் வடிவுறுங் குறியெழுத் தென்ப"

## 2. இசை 3. நடம்

"ஏழிசை நுட்பம் ஐந்திசைக் கூறே
ஒலி அணு
கால வாய்ப்பாடு (துடிக் கணக்கு)

| | |
|---|---|
| 8 அணு | - 1 தேர்த்துகள் காலம் |
| 8 தெர்த்துகள் காலம் | - 1 இம்மிக் காலம் |
| 8 இம்மிக்காலம் | - 1 எள்ளுக் காலம் |
| 8 எள்ளுக் காலம் | - 1 நெல்லுக் காலம் |
| 8 நெல்லுக் காலம் | - 1 விரல் காலம் |

கால வாய்ப்பாடு
பேராசிரியர் பி.சாம்பமூர்த்தி மற்றும் பேராசிரியர் கே. ராமச்சந்திரன் தாளதீபிகை - 2 (1980)

| | |
|---|---|
| 8 கணம் | - 1 லவம் |
| 8 லவம் | - 1 காஷ்டம் |
| 8 காஷ்டம் | - 1 நிமேஷம் |
| 8 நிமேஷம் | - 1 துடி |
| 8 துடி | - 1 குரு |

(2 துடி - 1 துருதம்; 2 துருதம் - 1 லகு; 2 லகு - 1 குரு)

## 4.சிற்பம் 5.கட்டிடம்

"எட்டே எட்டியல் எட்டெட் டியலே
எட்டின் நெறியே அளவை மாநெறி"
- ஐந்திறம் 675

"எட்டணு தேர்த்துகள் நெறியென் றாகி
எட்டு தேர்த்துகள் இம்மி நிலையாய்
எட்டுறும் இம்மி எள்ளென் றாகி
எட்டெள் ளொருநெல் அளவை குறித்தே
எட்டுறும் நெல்கை விரலெனக் கண்டே
அளவை ஆக்கம் அறிதல் கலையாய்
உளவுறும் நுட்பம் உண்மை கண்டே
கண்டுறும் அளவை கருத்தி லிருந்தி
விண்டுறும் நெறிமுறை விளம்பற் பாற்றே"
- ஐந்திறம் 676

ஒளி அணு சதுரம்
இடவாய்ப்பாடு (இடக் கணக்கு)

| | |
|---|---|
| 8 அணு | - 1 தேர்த்துகள் |
| 8 தெர்த்துகள் | - 1 இம்மி |
| 8 இம்மி | - 1 எள்ளு |
| 8 எள்ளு | - 1 நெல்லு |
| 8 நெல்லு | - 1 விரல் |

"அணுத்தருந் தன்மையி லையோன் காண்க
விணைப்பரும் பெருமை யிலீசன் காண்க"
- திருவாசகம்